# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# சுய கற்றல் கைமேடு - 2020
# கர்நாடக சங்கீதம்

## தரம் 8

## மெல்லிசைப் பாடல்களை இரசித்தல்

- மெல்லிசைப்பாடலின் இசையமைப்பு, தாளநடை போன்றவை கவர்ச்சிகரமானதாகவும் எளிமையானதாகவும் அமைந்திருக்கும்.
- இப்பாடலின் கருப்பொருளாக இயற்கைவளம், காதல், எழுச்சி, தத்துவம், விழுமியங்கள், பக்தி போன்ற விடயங்கள் அமைந்திருக்கும்.
- இப்பாடல்களின் கருத்து வெளிப்பாடு, இசையமைப்பு என்பவற்றுக்குப் பொருத்தமான இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.
- மெல்லிசைப் பாடல்களின் மொழிநடை எளிமையானதாக இருக்கும்.
- மெல்லிசைப்பாடலைக் கேட்டு இரசிப்பதால் அமைதி, மகிழ்ச்சி, அன்பு, பக்தி, உற்சாகம் போன்ற உணர்வுகள் ஏற்படும்.
- மெல்லிசைப்பாடல்களுக்கு உதாரணம் : பச்சைக் குழந்தையடி, வானம் சிவந்தது,

## கிராமிய இசைக்கருவிகளின் இசையை இரசித்தல்
## (உடுக்கை, டொல்கி, பறை)

- உடுக்கை :
    1. உடுக்கை ஒரு தோற்கருவியாகும்
    2. சிவபெருமான் கையில் காணப்படும் இசைக்கருவி
    3. இடை சுருங்கி பருத்துக் காணப்படுவதினால் "இடைசுருங்கிப் பறை" என்றும், "துடி" என்றும் அழைப்பர்.
    4. பஜனைகளிலும், மாரியம்மன் கோவில்களில் உருவேற்றுவதற்காகவும் இசைக்கப்படும்.
    5. இடக்கையினால் பிடித்துக் கொண்டு வலது கையினால் வாசிக்கப்படும்.

- பறை :
    1. முற்காலத்தில் அரச செய்திகளை அறிவிப்பதற்காக பயன்படுத்தும் இசைக்கருவியாகும்.
    2. அடித்து வாசிப்பதினால் இதனை முழக்கம் என்றழைப்பர்.
    3. இது ஒரு தோற்கருவியாகும்.
    4. ஐவகை நிலங்களுக்கும் ஏற்க ஐந்து பறைகள் வாசிக்கப்படும்.
    5. குச்சி கொண்டு அடித்து வாசிக்கப்படும்.

- டொல்கி :
    1. டொல்கி ஒரு தோற்கருவியாகும்.
    2. பஜனைகளில் வாசிக்கப்படும்
    3. இவ்வாத்தியம் மிருதங்கத்தின் அமைப்பை ஒத்ததாகும்.

## ஸப்தஸ்வரங்கள்

- கர்நாடக சங்கீதத்தில் சப்த ஸ்வரங்களாவன - ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம்.
- ஸப்த ஸ்வரங்களின் பிரிவுகள் - 1. ப்ரக்ருதி ஸ்வரங்கள்
  2. விக்ருதி ஸ்வரங்கள்

## ப்ரக்ருதி ஸ்வரங்கள்

- ப்ரக்ருதி ஸ்வரங்கள் பேதமற்றவை.
- பேதமற்ற ஸ்வரங்கள் - ஸ ப
- இதன் மறுபெயர்கள் - இயற்கை ஸ்வரங்கள், அசல ஸ்வரங்கள்
- அசல ஸ்வரம் - ஸ்வரங்கள் அசைவின்றிப் பாடப்படுவது.
- ப்ரக்ருதி ஸ்வரங்கள் - ஸட்ஜம்
  பஞ்சமம்

## விக்ருதி ஸ்வரங்கள்

- விக்ருதி ஸ்வரங்கள் பேதமுடையது.
- பேதமுடைய ஸ்வரங்கள் - ரிஷபம், காந்தாரம், மத்திமம், தைவதம், நிஷாதம்.
- இவை ஒவ்வொன்றும் இருவகையாக பிரிபடும்.
- ஸ்ருதியில் குறைந்த ஸ்வரம் - கோமள ஸ்வரம்
- ஸ்ருதில் கூடிய ஸ்வரம் -தீவிர ஸ்வரம்
- உதாரணம் ரி$_1$ – ரிஷபம் - கோமளம்
  ரி$_2$ – ரிஷபம் - தீவிரம்

## கோமள ஸ்வரங்கள்

- கோமள ஸ்வரம் - ஸ்ருதியில் குறைந்த ஸ்வரம்.
- ஸ்ருதியில் தீவிர ஸ்வரத்தை விட குறைவான ஸ்ருதியில் அமைந்திருக்கும்.
- தமிழிசையில் குறிப்பிடுவது – குறை ஸ்வரம், மென் ஸ்வரம்
- மறுபெயர் - சின்ன ஸ்வரம்
- கோமள பேத ஸ்வரங்கள் (1) சுத்த ரிஷபம்
  (2) சாதாரண காந்தாரம்
  (3) சுத்த மத்திமம்
  (4) சுத்த தைவதம்
  (5) கைஷிகி நிஷாதம்

## தீவிர ஸ்வரங்கள்

- தீவிர ஸ்வரம் - ஸ்ருதியில் கூடிய ஸ்வரம்
- ஸ்ருதியில் கோமள ஸ்வரத்தை விட கூடிய ஸ்ருதியில் அமைந்திருக்கும்.
- தமிழிசையில் குறிப்பிடுவது – நிறை ஸ்வரம்
- மறுபெயர் - பெரிய ஸ்வரம்
- தீவிர பேத ஸ்வரங்கள் (1) சதுஸ்ருதி ரிஷபம்
  (2) அந்தர காந்தாரம்
  (3) பிரதி மத்திமம்
  (4) சதுஸ்ருதி தைவதம்
  (5) காகலி நிஷாதம்

## 12 ஸ்வரஸ்தானங்கள்

- ஸ்வரம் ஒலிக்கும் இடமே ஸ்வரஸ்தானமாகும்.
- ஸ்வரஸ்தானங்கள் 12 ஆகும்.
- இதன் தமிழிசைப் பெயர் 12 சுரநிலைகள்
- 12 ஸ்வரஸ்தானங்கள் உருவாகும் முறை
    - ப்ரக்ருதி ஸ்வரங்களான ஸட்ஜம் பஞ்சமம் பேதமற்றவை.
    - விக்ருதி ஸ்வரங்களான ரிஷபம், காந்தாரம், மத்திமம், தைவதம், நிஷாதம் ஆகிய ஒவ்வொன்றும் கோமள தீவிர பேதத்தினால் 5×2=10 ஸவரஸ்தானங்கள் உருவாகின்றது.
    - இவற்றுடன் ப்ரக்ருதி ஸ்வரங்களான ஸட்ஜம் பஞ்சமத்தை சேர்க்கும் போது 10 + 2 = 12 ஸ்வரஸ்தானங்கள் உருவாகின்றது.

### 12 ஸ்வரஸ்தானங்களின்

| இல | சங்கேத குறியீடுகள் | ஸ்வரஸ்தானங்களின் பெயர் | கோமள தீவீர பேதம் |
|---|---|---|---|
| 01 | ஸ | ஸட்ஜம் | - |
| 02 | ரி$_1$ | சுத்த ரிஷபம் | கோமளம் |
| 03 | ரி$_2$ | சதுஸ்ருதி ரிஷபம் | தீவிரம் |
| 04 | க$_1$ | சாதாரண காந்தாரம் | கோமளம் |
| 05 | க$_2$ | அந்தர காந்தாரம் | தீவிரம் |
| 06 | ம$_1$ | சுத்த மத்திமம் | கோமளம் |
| 07 | ம$_2$ | பிரதி மத்திமம் | தீவிரம் |
| 08 | ப | பஞ்சமம் | - |
| 09 | த$_1$ | சுத்த தைவதம் | கோமளம் |
| 10 | த$_2$ | சதுஸ்ருதி தைவதம் | தீவிரம் |
| 11 | நி$_1$ | கைசிகி நிஷாதம் | கோமளம் |
| 12 | க$_2$ | காகலி நிஷாதம் | தீவிரம் |

## லகுவின் ஜாதிபேதம்

- திரியாங்கங்கள் - லகு, த்ருதம், அனுத்ருதம்
- திரியாங்கத்தில் ஜாதிபேதமடையும் அங்கம் - லகு

### லகுவின் ஜாதிபேத அட்டவணை

| இல | லகுவின் வகை | குறியீடு | மொத்த அட்சரகாலம் | செய்கை முறை |
|---|---|---|---|---|
| 01 | திஸ்ரலகு | $1_3$ | 3 | ஒரு தட்டும் 2 விரல் எண்ணிக்கையும் |
| 02 | சதுஸ்ரலகு | $1_4$ | 4 | ஒரு தட்டும் 3 விரல் எண்ணிக்கையும் |
| 03 | கண்டலகு | $1_5$ | 5 | ஒரு தட்டும் 4 விரல் எண்ணிக்கையும் |
| 04 | மிஸ்ரலகு | $1_7$ | 7 | ஒரு தட்டும் 6 விரல் எண்ணிக்கையும் |
| 05 | சங்கீர்ணலகு | $1_9$ | 9 | ஒரு தட்டும் 8 விரல் எண்ணிக்கையும் |

## கீதம்

- கீதம் அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படியாகும்.
- சங்கீத அப்பியாச முறையில் அலங்காரத்திற்குப் பின் கற்பிக்கப்படும்.
- உருப்படிகளில் மிகவும் எளிமையானது.
- ஒரே காலத்தில் பாடப்படும்.
- கீதத்தில் அங்க வித்தியாசம் கிடையாது.
- சங்கதிகளும் கடின வக்ரப்பிரயோகங்களும் கீதங்களில் காணப்படமாட்டாது.
- கீதத்தின் சாகித்தியத்தின் இடையே இஅய, வஇய போன்ற சொற்கள் காணப்படும்
  இதனை மாத்ருகா பதங்கள், கீத அலங்காரச் சொற்கள் என்றழைப்பர்.
- கீதம் ஆரம்பம் முதல் இறுதிவரை தொடர்ச்சியாக பாட வேண்டும்.
- கீதங்கள் தமிழ், கன்னடம், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் இயற்றப்பட்டுள்ளன.
- கீதம் சுலபமான இசையிலும், ஆதி, ரூபக தாளங்களிலும் அமைந்திருக்கும்.
- கீதத்தின் பிரிவுகள் - 1. சஞ்சாரி கீதம்
  2. இலட்சணகீதம்
- சஞ்சாரி கீதத்தின் மறு பெயர்கள் : சாமான்ய கீதம், லஷ்ய கீதம்
  - இக்கீதத்தின் சாகித்தியம் பகவத்ஸ்தோத்திரமாகவோ, வித்துவான்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியதாகவோ அமைந்திருக்கும்.
- கீதம் எந்த இராகத்தில் அமைந்துள்ளதோ அந்த இராகத்தின் இலட்சணக்தைக் சாகித்தியத்தின் மூலம் விளக்குவது இலட்சண கீதமாகும்.
  - இலட்சண கீதங்களின் வாயிலாக ஆதிகாலத்தில் வழக்கத்திலிருந்த இராகங்களைப் பற்றி அறியக் கூடியதாக உள்ளது.
  - இலட்சணகீதத்தின் பிரிவுகள் -1. ஜனகராகங்களில் அமைந்த இலட்சணகீதம்
    2. ஜன்னியராகத்தில் அமைந்த இலட்சணகீதம்

  - ஜனகராகங்களில் அமைந்த இலட்சணகீதத்தின் மறுபெயர் : இராகாங்க இராக இலட்சணகீதம்
- சஞ்சாரி கீதங்களை இயற்றிய மகான்கள் : புரந்தரதாஸர், பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
- இலட்சண கீதங்களை இயற்றிய மகான்கள் : பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள், வேங்கடமகி
- சஞ்சாரி கீதத்திற்கு உதாரணம் : கணநாதா - மாயாமாளவகொளை
  சிவபெருமானே – மத்தியமாவதி
- இலட்சண கீதத்திற்கு உதாரணம் : முகாரிராகம் - முகாரி
  பிலஹரிராகம் - பிலஹரி

## இசைக்கருவிகளின் பிரிவுகள்

- இசைக்கருவிகளின் பயன்கள் : 1. சங்கீத ஒலிகளின் நுட்பங்களை இலகுவாக அறிந்து கொள்ளலாம்
  2. மொழி கலப்பில்லாத தனியான இசையின் மேன்மையை அறிந்து கொள்ளலாம்.
- பண்டைய தமிழ் நூல்களில் பல இசைக்கருவிகளைப் பற்றிக் கூறப்பட்ட போதிலும் தற்போது சில கருவிகளே வழக்கத்தில் உள்ளது.
- பரத முனிவர் கி.மு. 4ஆம் நூற்றாண்டில் எழுதிய "நாட்டிய சாஸ்திரம்" எனும் நூலில் இசைக்கருவிகள் நான்கு பிரிவுகளைக் கொண்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.
- இசைக்கருவிகளின் பிரிவுகள் : 1. நரம்புக் கருவிகள் - தத
  2. துளைக் கருவிகள் - ஸுஷிர
  3. தோற் கருவிகள் - அவனத்த
  4. கஞ்சக் கருவிகள் - கன
- **நரம்புக் கருவிகள்** :
  1. இவை மரத்தினால் ஆக்கப்பட்டு, தந்திகள் இணைக்கப்பட்டடிருக்கும்.
  2. தந்திகளை மீட்டியோ அன்றி உராய்வன் மூலம் நாதம் உருவாக்கப்படுகின்றது.
  3. இக்கருவிகளுக்கு உதாரணம் : தம்புரா, வீணை, வயலின், சித்தார்

- **துளைக் கருவிகள்** : 1. இவை மரத்தினால் ஆக்கப்பட்டு, துளைகள் கொண்டமைந்கிருக்கும்.
  2. இக்கருவிகளின் துளைகள் ஊடாக காற்றைச் செலுத்தி ஊதுதல் மூலம் நாதத்தை உருவாக்கலாம்.
  3. இக்கருவிகளுக்கு உதாரணம் : புல்லாங்குழல், நாதஸ்வரம், மகுடி

- **தோற் கருவிகள்** : 1. இவை மரத்தினால் செய்யப்பட்டு பதப்படுத்திய தோலினால் மூடப்பட்டிருக்கும்.
  2. இக்கருவிகளின் தோலைக் இறுகக்கட்டி, அத்தோலைத் தட்டுவதன் மூலம் ஒலி பெறப்படுகிறது.
  3. இக்கருவிகளுக்கு உதாரணம் : மிருதங்கம், தவில், தபேலா, கஞ்சிரா

- **கஞ்சக் கருவிகள்** 1. இவை உலோகத்தினால் செய்யப்பட்டவை.
  2. உலோகத்தைத் தட்டுவதன் மூலம் இக்கருவிகளில் ஒலி எழுப்படுகிறது.
  3. இக்கருவிகளுக்கு உதாரணம் : கைத்தாளம், மோர்சிங், சேமக்கலம்

❖ **பிரதான வாத்தியம்** ( அயன் வாத்தியம் ) :
உதாரணம் : வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம்

❖ **பக்க வாத்தியம்** :
உதாரணம் : வயலின், மிருதங்கம், சாரங்கி

❖ **தாள வாத்தியம்** :
உதாரணம் : மிருதங்கம், தவில், கஞ்சிரா, மோர்சிங், கடம், தபேலா

❖ **ஸ்ருதி வாத்தியம்** :
உதாரணம் : தம்புரா, சுருதிப்பெட்டி, ஒத்து, ஏக்தார்

- **வயலின்** பிரதான வாத்தியமாகவும் பக்கவாத்தியமாகவும் இசைக்கப்படும்.

## நாட்டார் பாடல்களின் கலாசாரப் பின்னணி

➢ பாமர மக்கள் முதல் படித்தவர் வரை சுவைத்து அனுபவிக்கக் கூடிய பாடல்கள் நாட்டார் பாடல்களாகும்.
➢ இதன் மறுபெயர்கள் : பொதுஜனகானம், பாமரஜனகானம், எழுதாக் கவிதைகள், வாய்மொழி இலக்கியம்.
➢ நாட்டார் பாடல்கள் பாடப்படும் இராகங்கள் : ஆனந்தபைரவி, நாதநாமக்ரியை, புன்னாகவராளி, நவரோஜ், குறிஞ்சி
➢ நாட்டார் பாடல்களின் சிறப்புக்கள் :
  - சாஸ்திரிய இசைக்கு முற்பட்டது.
  - இலக்கணங்கள் வகுக்கப்படவில்லை.
  - இலகுவான தாளங்களில் பாடப்படும்.
  - இப்பாடல்களின வர்ணமெட்டுகள் சுலபமானவையாகவும், கவர்ச்சிகரமானதாகவும் காணப்படும்.
  - மனிதனுடைய பிறப்பு முதல் இறப்பு வரை இப்பாடல்கள் தொடர்புடையதாக அமைந்திருக்கும்∴
    - குழந்தை பிறந்தவுடன் மருத்துவிச்சி வாழ்த்துப் பாடலைப் பாடுவார்.
    - அன்னை குழந்தையை உறங்க வைக்க தாலாட்டுப் பாடலைப் பாடுவார்.
    - இளமையில் விளையாட்டுப் பாடல், வேடிக்கைப் பாடல், காதல் பாடல் ஆகியவற்றைப் பாடுவார்.
    - தொழில் செய்யும் போது அலுப்புத் தீர தொழில் பாடல்களைப் பாடுவார். (ஓடப்பாடல், கப்பற்பாடல், ஏற்றப்பாடல், அரிவுவெட்டுப் பாடல், அறுவடைப்பாடல்)
    - கடவுள் வழிபாட்டிலும், சமூகக் கொண்டாட்டங்களிலும் நாட்டார் பாடல்களைளக் பாடுவார்.
    - மனிதனின் இறப்பின் போது ஒப்பாரிப் பாடலைப் பாடுவார்.
  - பிரதேச ரீதியாக பல நாட்டார் பாடல்கள் காணப்படுகின்றன.
    - மலைநாடு : கொழுந்துப்பாடல், காமன் கூத்து, ஒயிலாட்டம்
    - மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் : வசந்தன் பாடல்கள்
    - மன்னார் : தென்மோடிப்பாடல்கள்

## தாலாட்டுப்பாடல்

- மனித வாழ்கையின் தொடக்கத்தில் பாடப்படுவது தாலாட்டுப் பாடலாகும்.
- தால் என்பது நாவைக் குறிக்கும்.
- நாவினால் ஓசை எழுப்பிப் குழந்தையை உறங்க வைத்தல் தாலாட்டுப் பாடல் ஆகும்.
- தாய் குழந்தையை தம்மடியிலோ, தோளிலோ, தொட்டிலிலோ வைத்து ஆட்டிய வண்ணம் தாலாட்டுப் பாடல்களைப் பாடுவர்.
- இப்பாடல்களின் மூலம் குழந்தையின் மீதான அன்பு, மாமன் பெருமை, குழந்தையின் குலப்பெருமை போன்றவை வெளிப்படுத்தப்படுகின்றன.
- ஆராரோ ஆரிவரோ என ஓசை எழுப்புவதன் மூலம் ஆராட்டுதல் எனவும், ஓராரோ ஓராரோ என ஓசை எழுப்புவதன் மூலம் ஓராட்டுதல் எனவும் அழைக்கப்படும்.
- இப்பாடலின் ஆரம்பத்திலும் முடிவிலும் ராராரோ ஆராரோ என்ற பதங்கள் பயன்படுத்தப்படும்.
- தாலாட்டுப் பாடல் பாடப்படும் இராகங்கள் : நீலாம்பரி, யதுகுலகாம்போஜி, சகானா, ஆனந்தபைரவி
- தாலாட்டுப் பாடல்களில் :
    1. எளிமையான இசை
    2. இலகுவான தாளம்
    3. எளிமையான சொற்பிரயோகங்கள்
    4. தத்ரூபமான உவமை
    5. உருவக அணிகள் கையாளப்படுகின்றன.
- தாலாட்டுப் பாடல்களுக்கு உதாரணம் :

  கொவ்வை இதழ் மகளே
  முத்தே பவளமே
  மன்னுபுகழ்க் கோசலை

## ஒப்பாரிப் பாடல்

- மனித வாழ்க்கையின் முடிவில் பாடப்படுவது ஒப்பாரியாகும்.
- பெண்கள் இப்பாடலைப் பாடுவார்கள்.
- தாய், கணவன், தந்தை, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் எவரேனும் இறந்து விட்டால் ஒருவருடைய உள்ளத்தில் எழுகின்ற துன்ப உணர்வே ஒப்பாரியாக வெளிப்படுகிறது.
- இறந்தவரின் வரலாற்றை இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது.
- ஒப்பாரிப் பாடல்கள் துன்ப உணர்வுடன் எளிய மொழிநடையில் இலகுவான இசையமைப்பில் அமைந்திருக்கும்.
- விளம்ப மத்திம லயம் கலந்து இதனைப் பாடுவார்கள்.
- ஒப்பாரிப் பாடல்கள் பாடப்படும் இராகங்கள் : முகாரி, ஆஹிரி
- நாட்டுப்புறங்களில் மரண வீடுகளில் சாவுக்கான குறியீட்டு அடையாளமாக உறுமி மேளம் வாசிக்கப்படும்.
- ஒப்பாரிப் பாடல்களுக்கு உதாரணம் :

  பொன்னான மேனியிலே
  முத்துப் பதித்த முகம்

தயாரிப்பு:- செல்வி.சூ.சாந்தா கிறிஸ்ரீன்,
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,
வவுனியா தெற்கு

## செயன் முறை
## தரம் 8

| இல | பாடல் வரி | வகை | இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|---|---|---|
| 1 | ஸஸரிரி ககமம | ஜண்டை வரிசை | மாயாமாளவகௌளை | ஆதி | ஸ்ரீ புரந்தரதாசர் |
| 2 | -------------- | மேல் ஸ்தாயி வரிகை | மாயாமாளவகௌளை | ஆதி | ஸ்ரீ புரந்தரதாசர் |
| 3 | ஸரிகரி/ ஸரி/ ஸரிகம | அலங்காரங்கள் | மாயாமாளவகௌளை | சதுஸ்ர ஜாதி மட்டியம் | ஸ்ரீ புரந்தரதாசர் |
| 4 | கணநாத குணம் நீதா | சஞ்சாரி கீதம் | மலகரி | ரூபகம் | T.V.பிச்சையப்பா |
| 5 | அன்பேதான் | சஞ்சாரி கீதம் | பிலகரி | ஆதி | எல்.திலகநாயகம்போல் |
| 6 | குருநாத | சஞ்சாரி கீதம் | பூபாளம் | ரூபகம் | மு.அருணாசல அண்ணாவி |
| 7 | சூதி இரண்டொழிய | வெண்பா | சங்கராபரணம் | ------------- | ஔவையார் |
| 8 | உன்னைத் துதிக்க | கீர்த்தனை | குந்தலவராளி | கீர்த்தனை | பாபநாசம்சிவன் |
| 9 | பொன்னார் மேனியனே | தேவாரம் | பந்துவராளி | ஆதி | சுந்தரமூர்த்தி நாயனார் |
| 10 | பால் நினைந்தூட்டும் | திருவாசகம் | மோகனம் | ------------- | மாணிக்கவாசகர் |
| 11 | நாடித்தேடி | திருப்புகழ் | விரும்பிய இராகம் | ஆதி (திஸ்ரநடை) | அருணகிரிநாதர் |
| 12 | ஏராளம் நெல் விதைத்து | நாட்டார் பாடல் | ------------- | சதுஸ்ரநடை, திஸ்ரநடை | ------------- |
| 13 | | | | | |

- “பொன்னார் மேனியனே” என்ற தேவாரத்தின்
  பண்:- நட்டராகம்
  தலம்:- திருமழப்பாடி

- “பால் நினைந்தூட்டும்” என்ற திருவாசகத்தின்
  பண்:- முல்லை